**13.03.2024**

**அ.வ.எண். 202/2012**

**<u>வா.சா.1 கஸ்தூரி அவர்களின் 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. வா.சா.ஆ 10 ல் செட்டில்மென்ட் ரிஜிஸ்டருக்கு திருத்தப்பட்டியல் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 10ன் அசல் ஆவணம் அசல் வழக்கு எண் 207/2006 ல் தாக்கல் செய்த வா.சா.ஆ 10ன் அசல் ஆவணம் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் அது என் வீட்டில் இருந்தது. யாருக்கு உத்தரவு வழங்கப்பட்டது என்றும் யாருக்கு அந்த ஆவணம் கொடுக்கப்பட்டது என்றும் விவரங்கள் ஏதும் வா.சா.ஆ 10 ல் இல்லை என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ 10 ல் அதில் குறிப்பிட்டுள்ள புல எண்களுக்கு ஏற்கனவே காளம் 1 முதல் 13 வரை உள்ள பதிவுகளைக நீக்கி அவைகளுக்கு பதில் அதில் கீழ்குறிப்பிட்டுள்ள பதிவுகளை சேர்க்கவும் என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாசகத்தின்படி வருவாய் துறை ஆவணங்களில் திருத்தம் செய்யப்பட்டதா என்று எனக்கு தெரியாது.

3. வா.சா.ஆ 10 ல் கடைசி பக்கத்தில் நிலவரி திட்ட உதவி அலுவலர் செங்கல்பட்டு என்று பேனாவால் எழுதி கையொப்பம் செய்யப்பட்டுள்ளது என்றாலும் அதில் வருவாய் துறை முத்திரை மற்றும் கோபுர முத்திரை எதுவும் இல்லை என்றாலும் சரிதான். வா.சா.ஆ 10 ல் கூறியுள்ள உத்தரவு யாருக்கு வழங்கப்பட்டது என்ற விவரம் அதில் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 10, 11, 12 மற்றும் 14 ன் படி தற்போது உள்ள வருவாய் ஆவணங்களில் பதிவுகள் உள்ளதா என்று எனக்கு தெரியாது.

4. எந்த திட்டத்தின்கீழ் வா.சா.ஆ 12 வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ 14 ல் குறிப்பிட்டுள்ள இனாம் ஒழிப்பு பட்டா எண் 7 நடைமுறைக்கு வந்தது என்று காண்பிப்பதற்கு நான் நிரந்தர ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. யு டி ஆர் க்கு முன்பு தாவா சொத்திற்கான பட்டா யார் பெயரில் வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது.

(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)